பாடம் - 2 الدرس الثاني

தவ்ஹீதுல் உலூஹிய்யா توحيد الألوهية

அனைத்து வணக்க வழிபாடுகளையும் அல்லாஹ்விற்கு மட்டுமே செய்து அவனை ஒருமைபடுத்துவதாகும்.

எல்லா வகையான வணக்க வழிபாடுகளையும் அல்லாஹ்வுக்கு மட்டுமே செலுத்துவதாகும். எவ்வாறெனில் மனிதன் அல்லாஹ்வுடன் வேறு எவரையும் கடவுளாக ஏற்படுத்தி அவரை வணங்கக்கூடாது அவரின் பக்கம் நெருக்கத்தைத் தேடக்கூடாது. தவ்ஹீதின் வகைகளில் இதுதான் மிக முக்கியமானதாகும். இதற்காகத்தான் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தான்.

﴿ وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴾ ﴿الذاريات: ٥٦﴾

ஜின்னையும் மனிதனையும் நான் படைத்தது என்னை வணங்குவதற்காகவே தவிர வேறில்லை (51:56)

அவன் தூதர்களை அனுப்பியதும், வேதங்களை அருளியதும் இந்த தவ்ஹீதுக்காகத்தான்.

﴿ وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ ﴾ ﴿الانبياء:٢٥﴾

(நபியே!) உமக்கு முன் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறுயாருமில்லை எனவே என்னையே வணங்குங்கள் என நாம் வஹி அறிவிக்காமல் இல்லை. (21:25)

தூதர்கள் அழைப்பு விடுத்தபோது இணைவைப்போர் ஏற்க மறுத்ததும் இந்தத் தவ்ஹீதைத்தான்.

﴿ قَالُوا أَجِئْتَنَا لِنَعْبُدَ اللَّهَ وَحْدَهُ وَنَذَرَ مَا كَانَ يَعْبُدُ آبَاؤُنَا ﴾ ﴿الأعراف:٧٠﴾

எங்கள் முன்னோர்கள் வணங்கி வந்ததை விட்டு விட்டு அல்லாஹ்வை மட்டும் நாங்கள் வணங்க வேண்டும் என்பதற்காக எங்களிடம் நீர் வந்திருக்கிறீரா? நீர் உண்மையாளராக இருந்தால் எங்களுக்கு நீர் எச்சரிப்பதை எங்களிடம் கொண்டுவாரும் என்று அவர்கள் கூறினார்கள். (7:70)

எனவே வணக்கங்களில் எதையும் அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்யக்கூடாது. அல்லாஹ்வுக்கு நெருக்கமான மலக்கிற்கோ அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதருக்கோ நல்லடியார்களுக்கோ இன்னும் படைப்பினங்களில் வேறு எவருக்கும் செய்வது கூடாது. ஏனெனில் வணக்கம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும்.